# <u>செய்தி குறிப்பு</u>

எண்.640/DRDM/PDeGS/2016/CSC 2.0 forward தேதி: 05-07-2017

(கிராமப் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் பொது சேவை மையங்கள் அமைத்தல்)

பொது சேவை மைய 2.0 திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாவட்டத்தில் பொது சேவை மையங்கள் இல்லாத அனைத்து கிராமப் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சேவை மையம் அமைக்க புதுச்சேரி மாவட்ட மின்னளுமைச் சங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, புதுச்சேரி மாவட்ட மின்னளுமைச் சங்கத்தினால் **23** கிராமப் பஞ்சாயத்துகள், மற்றும் நகராட்சிப் பகுதிகளில் **26** வார்டுகளில் பொது சேவை மையம் அமைக்க விருப்பமுள்ள மற்றும் தகுதிவாய்ந்த தொழில் முனைவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்ப படிவம், இணைக்கப்படவேண்டிய ஆவணங்களின் பட்டியல், தகுதிகள், பொதுசேவை மையத்திற்கு தேவையான உட்கட்டமைப்புகள், கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சி வார்டுகளின் பட்டியல் ஆகியவற்றை www.py.gov.in மற்றும் http://collectorate.py.gov.in எனும் இணையதளங்களில் இருந்து பதிவிரக்கம் செய்துகொள்ளலாம். விருப்பமுள்ள மற்றும் தகுதிவாய்ந்த நபர்கள், பதிவிரக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை (சுய சான்றொப்பமிட்ட தகுந்த ஆவண நகல்களுடன்) நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ புதுச்சேரி மாவட்ட மின் ஆளுமை சங்கம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுச்சேரி- 605 009 எனும் முகவரியில் **14-07-2017** அன்று மாலை **5:00** மணிக்குள் கிடைக்கும்படி சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மாவட்ட ஆட்சியர்**
**-மற்றும்-**
**தலைவர் (புதுச்சேரி மாவட்ட**
**மின்னாளுமைச் சங்கம்), புதுச்சேரி**